# உங்களுடைய ‘நகரவை’யைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்

STRATHFIELD COUNCIL










# உள்ளடக்கம்


## வருக! வணக்கம்! 4

‘நகரவை’யைப் பற்றிய தகவல்கள் 6
நகரவை உறுப்பினர்கள் 6
நகரவை தேர்தல்கள் 6
நகரவை கூட்டங்கள் 7
நகரவைத் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் 7
பிரசாவுரிமை 7
ஸ்ட்ராத்ஃபீல்ட் பகுதியில் கிடைக்கும் சேவைகள் 8
‘கம்யூனிட்டி டிரெக்டரி’ 10
பாதுகாப்பு 10
உள்ளூர் பிரச்சனைகளைத் தெரிவியுங்கள் 11

## வாழுங்கள் 12

குப்பை-கூள அகற்றல் 13
கழிவுகள் 13
குப்பை-வீசல் மற்றும் சட்டத்துக்குப் புறம்பாகக் குப்பை கொட்டுதல் 14
விலங்குகள் மற்றும் செல்லவிலங்குகள் 14
வீட்டின் பின்புறமுள்ள நீச்சல் குளங்கள் 14
மரங்கள் 14
கட்டுமான அபிவிருத்தி விண்ணப்பங்கள் 15
‘ஸ்ட்ராத்ஃபீல்ட் கணெக்டர் பேருந்து’ 15
நகரவைக் கட்டணங்கள் 15

## வேலை செய்யுங்கள் 16

உணவுப் பாதுகாப்பு 17
அனுமதிகள் 17

## பங்குபற்றுங்கள் 18

புதர் நிலப் பராமரிப்பு 19
சமுதாயத் தோட்டம் 19
உங்களுடைய கருத்துக்களைத் தெரிவியுங்கள் 19
எங்களுடன் இணைந்து தன்னார்வலராக வேலை செய்தல் 19
சமூக மானியங்கள் 19

## விளையாடுங்கள் 20

விளையாட்டு அரங்கங்கள் 21
‘பே-டு-பே’ சைக்கிள் மற்றும் நடைபாதை 21
உடற்பயிற்சி சாதனங்கள் 21
பூங்காக்கள் மற்றும் விளையாட்டு அரங்குகள் வாடகை வசதி 21
நிகழ்ச்சிகள் 22
‘ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில் நூலகம் மற்றும் இன்னோவேஷன் ஹப்’ 24

## எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் 26

# வருக! வணக்கம்!





‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ உள்ளாட்சிப் பகுதிக்கு உங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.


பன்முக கலாச்சாரம் கொண்ட, மாறுபட்ட மற்றும் படித்த சமூகத்தின் தாயகமாகவும், அதனால் வாழ்வதற்கு உண்மையிலேயே தனித்துவமான இடமாகவும் உள்ள ஸ்ட்ராத்ஃபீல்ட் சிட்னியின் உள் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

நாங்கள் கவனம் செலுத்தும் சமூக நல்வாழ்வு, இணைப்பு வசதிகள், குடிமைப் பெருமை மற்றும் இட மேலாண்மை, வாழ்வதற்குதகுந்த சுற்றுப்புறங்கள் மற்றும் பொறுப்பான தலைமைத்துவம் ஆகியவற்றின் மூலம், இங்கு வசிப்போர் மற்றும் வருகை தருவோர் ஆகிய இருவருக்குமே கவர்ச்சிகரமான மற்றும் வாழ்வதற்கேற்ற இடத்தைத் தொடர்ந்து வழங்க ‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ நகரவை உறுதிபூண்டுள்ளது.

எப்போதும் சிறந்த வாழ்க்கை முறை மற்றும் சேவைகளை குடியிருப்பாளர்களுக்குக் கொண்டு வர ‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ நகரவை முயற்சிக்கிறது, இது ‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’-ஐ வாழச் சிறந்த இடமாக மாற்றுகிறது!

‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ பகுதியைப் பற்றியும் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை என்ன சேவைகளை வழங்குகிறது என்பதைப் பற்றியும் அறிய இந்த கையேட்டை மிகவும் பலனளிக்கும் ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தலாம்.

பெரும்பான்மையான பிரிவுகளில் ஒரு ‘QR’ குறியீட்டை நீங்கள் காணலாம். உங்களுடைய கைப்பேசியில் உள்ள ‘கேமரா’வைத் திறந்து ஒரு புகைப்படம் எடுப்பது போன்று குறியீட்டின் மீது பிடியுங்கள். நீங்கள் தேடும் குறிப்பிட்ட தலைப்பைப் பற்றிய கூடுதல் தகவல்களை உங்களுக்குத் தெரிவிக்கும் இணையதள இணைப்பு ஒன்று தோன்றும்.





# நகரவையைப் பற்றிய தகவல்கள்

‘ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில்’ என்பது சிட்னி-யின் உள் மேற்கில் அமைந்துள்ள நடுத்தர அளவிலான ஒரு நகரவையாகும்.

‘ஸ்ட்ராத்ஃபீல்ட் உள்ளாட்சிப் பகுதி (LGA)’ சுமார் 14.1 சதுர கிலோமீட்டர் மொத்தப் பரப்பளவு கொண்டது. சிட்னி-யின் உள் மேற்குப் பகுதியில் நகர மையத்திலிருந்து 10.5 கிலோமீட்டர் தொலைவிலும், பரமட்டா-விற்கும் நகரத்திற்கும் இடையில் பாதி வழியிலும் ‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ நகரவை அமைந்துள்ளது.

ஸ்ட்ராத்ஃபீல்ட் உள்ளாட்சிப் பகுதியில் கீழ்க்காணும் நகர்ப்புறங்கள் உள்ளன:

ஸ்ட்ராத்ஃபீல்ட் (அஞ்சல் குறியீடு 2135)
ஸ்ட்ராத்ஃபீல்ட் தெற்கு (2136)
ஹோம்புஷ் (2140)
ஹோம்புஷ் மேற்கு (2140)
பெல்ஃபீல்ட்-ன் ஒரு பகுதி (2191)
கிரீனக்ர்-ன் ஒரு பகுதி (2190)

# நகரவைஉறுப்பினர்கள்

உள்ளாட்சியில் அரசியல், மற்றும் நிர்வாகம் என்ற இரு பிரிவுகள் உள்ளன. அரசியல் பிரிவினைப் பொருத்தவரை மேயர், துணை மேயர் மற்றும் கவுன்சிலர்களால் ஆனது, அவர்கள் மாதாந்திர அடிப்படையில் நகரவை சந்திப்புகளில் கலந்துகொண்டு சமூகத்தையும் அதன் நீண்ட கால எதிர்காலத்தையும் பாதிக்கும் திட்டங்கள் மற்றும் முடிவுகளில் வாக்களிக்கிறார்கள்.

மேயர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரும்பான்மையான கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

நிர்வாக ஊழியர்கள், CEO-ன் வழிகாட்டுதலின் கீழ், அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிக்கிறார்கள். சமூகத்திற்குரிய பல்வேறு சேவைகளை வழங்கும் பல துறைகள் நகரவையில் உள்ளன.

நகரவை உறுப்பினர்களைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

# நகரவைத் தேர்தல்கள்

உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்களிப்பது என்பது NSW-ல் கட்டாயமானது. தேர்தலில் வாக்களிக்க உங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும். ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது. புதிதாகக் குடிவந்தவர்கள் வாக்காளர் பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்து தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். பதிவுப் படிவங்களை எந்த ஒரு ‘ஆஸ்திரேலியா தபால்’ அலுவலகத்திலிருந்தும் பெறலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு, இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்து NSW அரசாங்க இணையதலத்திற்குச் செல்லவும்.

# நகரவை சந்திப்புகள்

நகரவை சந்திப்புகள் மாதத்தின் முதல் செவ்வாய்கிழமை (ஜனவரி தவிர) மாலை 6.30 மணிக்கு நகரவை சேம்பர்ஸ், 65 ஹோம்புஷ் ரோடு, 'ஸ்ட்ராத்ஃபீல்ட்'-ல் நடைபெறும். சட்டம், ஊழியர்கள் அல்லது பிற இரகசிய விஷயங்களைப் பற்றிய கலந்துரையாடல்களைத் தவிர நகரவை சந்திப்புகளில் பொதுமக்கள் கலந்து கொள்ளலாம்.

பொது மக்கள் நகரவை மற்றும் கமிட்டி சந்திப்புகளில் கலந்து கொண்டு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்ள பொது விஷயங்கள் பற்றிப் பேசலாம். பொது மக்கள் நகரவை சந்திப்புகள் நடைபெறுவதை இணையவழியில் நேரலையிலும் காணலாம்.

நிகழ்ச்சி நிரல் மற்றும் அறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்கள், நகரவை சந்திப்பிற்கு முந்தைய வியாழக்கிழமை நகரவையின் இணையதலத்தில் கிடைக்கும். சந்திப்பு நடந்த பின்னர் ஐந்து வேலை நாட்களுக்குள் நகரவை கூட்டத்தின் நிகழ்ச்சிப் பதிவுகள் நகரவையின் வலைதளத்தில் கிடைக்கும்.

நகரவை சந்திப்புகளைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

# நகரவை திட்டங்கள் மற்றும் கொள்கைகள்

தன்னுடைய திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பலவற்றைப் பற்றி சமூகத்தின் கருத்துக்களையும் முறையீடுகளையும் நகரவை கோருகிறது. விவரங்களைத் தெரிந்துகொள்ள நகரவையின் வலைதலத்தையும் eNews-ஐயும் அவ்வப்போது பாருங்கள்.

நகரவையின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

# பிரசாவுரிமை

புதிதாக உள்ளடக்கப்பட்ட பிரசைகளுக்காக ஒவ்வொரு இரண்டாவது மாதமும் 'பிரசாவுரிமை சடங்கு'களை ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை நடத்துகிறது.

'பிரசாவுரிமை சடங்கு'களை பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.



# ஸ்ட்ராத்ஃபீல்ட் பகுதியில் கிடைக்கும் சேவைகள்



**நகரவை அலுவலகங்கள்**

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை வாடிக்கையாளர் சேவை மையம் (65 ஹோம்புஷ் ரோடு, ஸ்ட்ராத்ஃபீல்ட்)

**சமூக இடங்கள் / வசதிகள்**

'ஹை ஸ்டிரீட் கம்யூனிட்டி சென்டர்'
'ஹோம்புஷ் வெஸ்ட் கம்யூனிட்டி சென்டர்'
'ஸ்ட்ராத்ஃபீல்ட் கம்யூனிட்டி சென்டர்'
'ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில் கம்யூனிட்டி கார்டென்'
'ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில் லைப்ரரி அன்டு இன்னோவேஷன் ஹப்' (65-67 ரோசெஸ்டர் ஸ்டிரீட், ஹோம்புஷ்)
'ஸ்ட்ராத்ஃபீல்ட் டவுன் ஹால் அன்டு சப்பர் ரூம்'
'தி டட்டன் சென்டர்'

**விளையாட்டு வசதிகள்**

Airey Park
Bark Huts Reserve
Begnell Field
Bressington Park
Cooke Park
Hudson Oval
Mason Park
Strathfield Park

**விளையாட்டு அரங்கங்கள் மற்றும் பூங்காக்கள்**

Airey Park
Augustus Loftus Reserve
Austin Park
Bark Huts Reserve
Begnell Field
Bill Boyce Reserve
Boden Reserve
Bressington Park
Centenary Playground
Cooke Park
Coronation Reserve
Dean Reserve
Drew Street Playground
Edwards Park
Elliott Reserve
Fitzgerald Park
Ford Park
Frank Zions Reserve
Freshwater Park
Henley Reserve
Hudson Park
Inveresk Park
Ismay Reserve
Marlene Reserve
Mason Park
Melville Reserve
Pilgrim Park
St Annes Reserve
Strathfield Park
Tavistock Reserve
Wallis Reserve
Wentworth Reserve

**Transport**

Flemington Station
Homebush Station
Strathfield Connector Bus
Strathfield Station

**பொழுதுபோக்கு வசதிகள்**

Cooke Park Skate Park
Hudson Park Driving Range
Strathfield Croquet Club


ஹோம்புஷ்
SUPERMARKET
ஹோம்புஷ்
UNIVERSITY
ஸ்ட்ராத்ஃபீல்ட்
கிரீனக்கர்
ஸ்ட்ராத்ஃபீல்ட் சவுத்
பெல்ஃபீல்ட்
கிரீனக்கர்
பிரதான சாலை
பொதுப் பூங்கா
நகரவை
நூலகம்
நீர்வழி
இரயில் நிலையம்
வெளிப்புற உணவகம்
ஷாப்பிங் / ரீட்டெய்ல்
பள்ளி / கல்வி நிறுவனம்



# ‘கம்யூனிட்டி டிரெக்டரி’

உள்ளூர் அளவில் கிடைக்கும் சேவைகள் மற்றும் வசதிகள் பற்றிய தகவல்களை குடிவாழ்வோர் எளிதில் அணுகுவதற்கு ஏற்றவாறு ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை ஒரு இணையவழியிலான ‘கம்யூனிட்டி டிரெக்டரி’யை வைத்திருக்கிறது. ‘ஸ்ட்ராத்ஃபீல்ட் ‘உள்ளாட்சிப் பகுதிக்குள் உள்ள அல்லது அந்தப் பகுதியில் சேவை செய்யும் இலாப நோக்கற்ற, சமூகம் சார்ந்த நிறுவனங்கள், அரசுத் துறைகள் மற்றும் முகமைகள், சேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவை இந்தப் பட்டியல்களில் அடங்கும்.

எமது ‘கம்யூனிட்டி டிரெக்ட்ரி’யைப் பார்க்கவோ, உங்களுடைய லாப நோக்கமற்ற, சமூக அடிப்படையிலான நிறுவனத்தைப் பட்டியலில் சேர்க்கவோ, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

# பாதுகாப்பு

அனைத்து அவசரகால விஷயங்களுக்கும், தயவுசெய்து உடனடியாக ‘000’-ஐ அழைக்கவும்.

அனைத்து அவசரநிலையற்ற காவல்துறை சார்ந்த விஷயங்களுக்கும், தயவுசெய்து 131 444-ல் ‘காவல்துறை உதவி இணைப்பி’னை அழைக்கவும்.

‘ஸ்ட்ராத்ஃபீல்ட்’ உள்ளாட்சிப் பகுதியில் இரு உள்ளூர் காவல் நிலையங்கள் உள்ளன:

**‘ஆபர்ன் போலீஸ் ஏரியா கமாண்ட்’**
Corner of Queen and Susan Streets
AUBURN 2144
தொ.பேசி: 02 9646 8699

**‘பர்வுட் போலீஸ் ஏரியா கமாண்ட்’**
Belmore St
BURWOOD 2134
தொ.பேசி: 02 9745 8499

அவசர நிலையில்லாத குற்றச் செயல்கள் சம்பந்தமாகப் புகாரளிக்க, தயவுசெய்து நீங்கள் அழைக்க வேண்டிய ‘கிரைம் ஸ்டாப்பர்ஸ்’ எண்: 1800 333 000

‘தீ மற்றும் மீட்பு NSW அவசரகால சேவைகள்’ பற்றிய பொது விசாரனைகளுக்கு, தயவுசெய்து அழைக்கவும்: 02 9265 2999

NSW ஆம்புலன்ஸ் தலைமை அலுவலகத்திற்கான பொதுவான வினவல்களுக்கு, தயவுசெய்து அழைக்கவும்: 02 9320 7777.

**‘நகரவை ரேஞ்சர்’கள்**
‘நகரவை ரேஞ்சர்’கள் ஸ்ட்ராத்ஃபீல்ட் பகுதியில் வாழும் மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், அனைவரும் சட்டத்திற்கு இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தவும் ஸ்ட்ராத்ஃபீல்ட்-ஐ சுற்றுக்காவல், செய்வார்கள். உங்களுக்கு ஒரு ‘ரேஞ்சர்’ தேவைப்பட்டால் நீங்கள் 9748 9999 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.



# உள்ளூர் பிரச்சனைகளைத் தெரிவியுங்கள்

நடைபாதைகள், சாலைகள், அடைபட்டுப்போன வடிகால்கள், சுவர்க் கிறுக்கல்கள், சேகரிக்கப்படாத குப்பைகள் அல்லது கவுன்சிலின் கவனம் தேவைப்படும் எதைப்பற்றியும் தெரிவிப்பதற்கு, நகரவையுடன் தொடர்புகொள்ள வேண்டிய எண்: 9748 9999 அல்லது அதன் மின்னஞ்சல்: council@strathfield.nsw.gov.au.




# வாழுங்கள்

## குப்பை-கூள அகற்றல்

நகரவையின் 'குப்பை-கூள அகற்றல் அழைப்பு' சேவையானது 2 கன மீட்டர்கள் வரை உள்ள பெரிய வீட்டுப் பொருட்களை அகற்றுவதற்கு ஆண்டுக்கு மூன்று முறை ஒவ்வொரு வீட்டிற்கும் அனுமதியளிக்கிறது. நகரவையின் 'குப்பை-கூள அகற்றல்' முன்பதிவுகள் திங்கட்கிழமைகளில் ஏற்கப்படுகின்றன.

உங்களுடைய குப்பை-கூள அகற்றல் சேவைக்கு முன்பதிவு செய்வதற்கு முன், 'போவர் மறுபயன்பாடு மற்றும் பழுதுபார்ப்பு மையத்'(Bower Reuse and Repair Centre)துடன் தொடர்புகொண்டு, மரச்சாமான்கள் மற்றும் வீட்டுப் பொருட்களை நல்ல நிலையில் இலவசமாக சேகரித்து மறுசுழற்சி செய்ய முயற்சி செய்யுங்கள்.

முன்பதிவு அவசியமானது. இணையவழியில் முன்பதிவு செய்ய, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.



## கழிவுப் பொருட்கள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் LGA-வில் மூன்று வெவ்வேறு நிற கழிவுத் தொட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சிவப்பு மூடியுள்ள தொட்டி பொது வீட்டுக் குப்பைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொட்டி ஒவ்வொரு வாரமும் சேகரிக்கப்படுகிறது.

மஞ்சள் மூடியுள்ள தொட்டி மறுசுழற்சிக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொட்டி இரு வாரங்களுக்கு ஒருமுறை சேகரிக்கப்படுகிறது.

பச்சை மூடியுள்ள தொட்டி தோட்டக் கழிவுகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொட்டி இரு வாரங்களுக்கு ஒருமுறை சேகரிக்கப்படுகிறது.

சேகரிக்கும் நாட்கள் மற்றும் இன்னும் குறிப்பாக, ஒவ்வொரு தொட்டியிலும் எந்தக் கழிவுகளைப் போடலாம் என்பது உட்பட கழிவு சேகரிப்பு பற்றிய கூடுதல் தகவலுக்கு, கீழ்க்காணும் 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

மற்ற வகை மறுசுழற்சிகளைப் பொருத்தவரை, தேவையற்ற பிரிண்டர் கார்ட்ரிட்ஜ்கள் அல்லது பேட்டரிகள் போன்ற சில உற்பத்திப்பொருட்கள் மற்றும் பொருட்களை எவ்வாறு சிறந்த முறையில் மறுசுழற்சி செய்வது என்பதற்கு வழிகாட்டுவதற்காக A-Z வழிகாட்டி நகரவையிடம் உள்ளது. இவற்றை 'ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை லைப்ரரி மற்றும் இன்னோவேஷன் ஹப்'பில் உள்ள மறுசுழற்சி நிலையங்களில் பாதுகாப்பாக அப்புறப்படுத்தலாம்.

A-Z வழிகாட்டுதல்களைப் பார்க்க, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.



# அசுத்தப்படுத்தல் மற்றும் சட்டத்துக்குப் புறம்பாகக் குப்பை கொட்டுதல்

நடைபாதைகள், இயற்கையான துண்டு நிலங்கள், பூங்கா, குறுகிய சந்துகள், தெருக்கள் ஆகிய இடங்களில் அல்லது குப்பைத் தொட்டிக்கு அருகில் குப்பைகளை விட்டுச் செல்வது சட்டத்துக்குப் புறம்பானது. அசுத்தப்படுத்துவது அல்லது குப்பை கொட்டுதலுக்கு உடனடியாகத் தண்டம் விதிக்கப்படும்.

அசுத்தப்படுத்தவது மற்றும் சட்டத்துக்குப் புறம்பாக குப்பை கொட்டுவது என்பது கீழ்க் காண்பன போன்ற பல பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன:

- நீர்வழிகளின் மாசுபாடு
- வடிகால்கள் அடைப்பு
- சுகாதார அபாயங்கள்
- தீங்குதரும் பூச்சிகள் ஈர்க்கப்படல்
- வளங்களின் வீணாக்கம்
- சுத்தம் செய்வதற்கும் அகற்றுவதற்கும் ஆகும் செலவு சமூகம் முழுவதற்குமே ஏற்படுகிறது

அசுத்தப்படுத்துவது மற்றும் சட்டத்துக்குப் புறம்பாகக் குப்பை கொட்டுவது பற்றிப் புகார் தெரிவிப்பது எப்படி என்பது பற்றியும், இலை குப்பை-கூள மாசுபாட்டைத் தவிர்ப்பதைப் பற்றியுமான கூடுதல் தகவலுக்கு, இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

# விலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகள்

ஒரு புதிய செல்லப்பிராணியைத் தத்தெடுக்க முடிவு செய்யும் போது, பொறுப்பான செல்லப்பிராணி உரிமையாளராக எப்படி இருப்பது என்பதைப் பற்றியும், 'அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்' (FAQ) பக்கம் உட்பட, புதிய செல்லப்பிராணியைத் தத்தெடுக்கும்போது நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியுமான மேலதிகத் தகவல்களுக்கு ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் 'விலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகள்' (Animals and Pets) எனும் வலைப்பக்கத்தைப் பார்க்கவும்.

'போஸ்ஸம்' (possum), தேனீக்கள் அல்லது பறவைகள் போன்ற விலங்குகளை வைத்திருந்தால், அவற்றைப் பற்றிய தகவல்களுக்கு இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

# கொல்லைப்புற நீச்சல் குளங்கள்

NSW-ல் உள்ள அனைத்து வீட்டு நீச்சல் குளங்களும் 'NSW நீச்சல் குள பதிவே'ட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். தங்களுடைய நீச்சல் குளங்களைப் பதிவு செய்வது அந்தக் குளங்களின் உரிமையாளர்களது பொறுப்பாகும்.

அனைத்து புதிய நீச்சல் குளங்களுக்கும் ஒப்புதல் பெறப்பட வேண்டும். நீங்கள் ஒரு நீச்சல் குளத்தைக் கட்ட விரும்பினால், குழந்தைகள் அங்கு சென்று விடாமல் தடுக்கும் வகையில் அந்தக் குளத்தைச் சுற்றி வேலி போடப்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

வீட்டின் பின்புறம் உள்ள நீச்சல் குளங்கள் பற்றிய, அல்லது உங்களுடைய குளத்தைப் பதிவு செய்வது பற்றிய கூடுதல் தகவலுக்கு, இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

# மரங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை பகுதி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து நடப்பட்ட மரங்கள் நிறைந்த பகுதியாக உள்ளது. ஸ்ட்ராத்ஃபீல்ட்-ல் பூர்வீக மரங்கள், புதர் நிலங்கள் மற்றும் அருகிவரும் தாவர இனங்களின் எச்சங்கள் சில உள்ளன.

கீழ்க் காண்பவை பற்றிய தகவலுக்கு

- மரக் கிளை நறுக்கல் மற்றும் மரம் அகற்றல்
- தெரு மரங்கள்
- அண்டை வீட்டு மரங்கள்
- மரங்களைத் தேர்ந்தெடுத்து நடுதல்

மரங்கள் பற்றிய வேறு எந்த ஒரு கேள்விக்கும், தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## கட்டுமான அபிவிருத்தி விண்ணப்பங்கள்

ஒரு கட்டடத்தில் ஏதும் மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர், ஒரு கட்டுமான அபிவிருத்தி விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு கட்டுமான அபிவிருத்திவிண்ணப்பம் (DA) என்பது சொத்தில் ஒரு கட்டுமான அபிவிருத்தியைச் செய்வதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான ஒரு முறைப்படியான கோரிக்கையாகும். இந்த வகையான கட்டுமான அபிவிருத்தி ஒப்புதல் என்பது NSW-ல் கட்டுமான அபிவிருத்தி ஒப்புதலைப் பெறுவதற்கான மிகப் பொதுவான வழியாகும்.

ஜூலை 1, 2020 முதல், ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவைக்கான கட்டுமான அபிவிருத்தி விண்ணப்பங்கள் மற்றும் 'கட்டுமான அபிவிருத்தி இணக்க சான்றிதழ்' (Complying Development Certificate)கள் உட்பட அனைத்துத் திட்டமிடல் விண்ணப்பங்களும் 'NSW அரசாங்க பிளானிங் போர்டல்' (NSW Government Planning Portal) வழியாக மின்னணு முறையில் இணையவழியில் பதிவு செய்யப்பட வேண்டும். தாள்களில் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் இனிமேல் ஏற்கப்படாது.

உங்களுடைய கட்டுமான அபிவிருத்தி விண்ணப்பம் பற்றிப் பேச விரும்பினால், நீங்கள் அழைக்க வேண்டிய நகரவையின் 'டூட்டி பிளானர்' (Duty Planner)களின் தொ.பேசி எண் 02 9748 9999-ஐ அழையுங்கள், அல்லது council@strathfield.nsw.gov.au என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள், அல்லது தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.




## 'ஸ்ட்ராத்ஃபீல்ட் கனெக்டர் பேருந்து'

'ஸ்ட்ராத்ஃபீல்ட் கனெக்டர்' என்பது இப் பகுதியில் வாழும் குடியிருப்போரும் வருகையாளர்களும் பயணிப்பதற்கான இலவசப் பேருந்து சேவையாகும்.

'கனெக்டர்' பேருந்தின் பிரதான நிறுத்தங்களில் சில:

- DFO
- ஹோம்புஷ் ஷாப்ஸ் மற்றும் இரயில் நிலையம்
- Homebush மேற்கு ஷாப்ஸ்
- ஸ்ட்ராத்ஃபீல்ட் கம்யூனிட்டி சென்டர்
- ஸ்ட்ராத்ஃபீல்ட் நூலகம் மற்றும் இன்னோவேஷன் ஹப்
- ஸ்ட்ராத்ஃபீல்ட் சவுத்
- ஸ்ட்ராத்ஃபீல்ட் சதுக்கம் மற்றும் இரயில் நிலையம்
- சிட்னி மார்க்கெட்ஸ்
- ஸ்ட்ராத்ஃபீல்ட் டவுன் ஹால்

'ஸ்ட்ராத்ஃபீல்ட் கனெக்டர்' பற்றிய கூடுதல் தகவலுக்கும், 'பஸ் டிராக்கர்'-ஐ அணுகவும், இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## நகரவைக் கட்டணங்கள்

நகரவைக் கட்டணங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள நிலத்தின் மதிப்புக்கு ஏற்ப கணக்கிடப்படுகின்றன. ஸ்ட்ராத்ஃபீல்ட் உள்ளாட்சிப் பகுதியில் நிலத்தின் மதிப்பு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை 'NSW வேல்யூவர் ஜெனரல்' அவர்களால் தீர்மானிக்கப்படுகிறது. நகரவை அதன் வருடாந்திர செயல்பாட்டுத் திட்டத்தில் டாலரில் ஒரு விகிதத்தை நிர்ணயிக்கிறது, அது பின்னர் உங்களுடைய நில மதிப்பீட்டால் பெருக்கப்படுகிறது. இது பின்னர் சொத்துக்களின் உரிமையாளர்களால் செலுத்தப்படுகிறது.

நில மதிப்பை தீர்மானிக்கும்போது சமீபத்திய விற்பனை விலைகள், நிலம் இருக்கும் மண்டலம் மற்றும் பொது வசதிகளுக்கான அணுகல் உட்பட்ட பல காரணிகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதாவது, ஸ்ட்ராத்ஃபீல்ட் உள்ளாட்சிப் பகுதியில் உள்ள சொத்துக்களுக்கு விதிக்கப்படும் கட்டணங்கள் மற்ற நகரவைகள் வசூலிக்கும் கட்டணங்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கும்.

உங்களுடைய கட்டணங்களைச் செலுத்துவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.



# வேலை



## உணவுப் பாதுகாப்பு

உணவு ஒழுங்குமுறை மற்றும் பாதுகாப்பான முறையில் உணவுப்பொருட்களைக் கையாளும் நடைமுறைகளை மேம்படுத்துவதில் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை ஒரு முக்கிய பங்காற்றுகிறது. ஸ்ட்ராத்ஃபீல்ட் உள்ளாட்சிப் பகுதியில் (NSW உணவு ஆணையத்தால் உரிமம் பெற்ற வளாகத்தைத் தவிர) உணவு பரிமாறப்படும் வளாகங்களை நகரவை தொடர்ந்து ஆய்வு செய்கிறது.

நகரவையின் பணிகளில் அடங்குவன:

- உணவு வளாகங்களில் தொடர்ந்து ஆய்வு நடத்துவது
- உணவு மற்றும் சுகாதார கருத்தரங்குகளை நடத்துவது
- பொதுமக்கள் அளிக்கும் புகார்களைத் தொடர்ந்து கண்காணிப்பது

இப்பகுதியில் 'உணவுப் பாதுகாப்பு தனிச்சிறப்பு விருதுகள்'-ஐ வென்ற உள்ளூர் கடைகளின் பட்டியலைப் பார்க்க, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## அனுமதிகள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் பகுதியில் அநேக வகையான அனுமதிகளுக்காக ஒரு வர்த்தகத்தினால் விண்ணப்பிக்க இயலும். அவற்றுள் அடங்குவன:

- வான-வெடி வேடிக்கைகள்
- பணி அனுமதிகள்
- சாலை அனுமதிகள்
- 'ஃபில்மிங்' மற்றும் புகைப்பட அனுமதிகள்
- நடைபாதைக் காட்சி அனுமதிகள்
- 'வெளிப்புற உணவருந்தல்' அனுமதிகள்

உங்களுடைய நிறுவனம் இந்த அனுமதிகளில் எவற்றுக்காகவும் விண்ணப்பிக்க வேண்டியிருந்தாலோ, கூடுதல் தகவலுக்கோ, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.





# பங்கு பற்றுங்கள்

## புதர் நிலப் பராமரிப்பு

புதர் நிலப் பராமரிப்பு என்பது ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வரும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு திட்டமாகும்! புதர் நிலப் பராமரிப்பின் நோக்கம் பூர்வீக விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவதாகும்.

புதர் நிலப் பராமரிப்பில் யார் வேண்டுமானாலும் சேரலாம், உங்களுக்குத் தேவையானது தண்ணீர் பாட்டில் மற்றும் முழுமையாக மூடப்பட்ட காலணிகள் மட்டுமே.

16 வயதிற்குக் கீழ்ப்பட்டவரா நீங்கள்? இந்த வேடிக்கை நிகழ்வில் சேர தயவுசெய்து ஒரு பொறுப்பான வயதுவந்தவரோடு வாருங்கள்.

‘பொஸ்ஸம்’கள், தேனீக்கள் அல்லது பறவைகள் போன்ற விலங்குகளை வைத்திருந்தால், அவற்றைப் பற்றிய தகவல்களுக்கு இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

## சமுதாயத் தோட்டம்

ஸ்ட்ராட்ஃபீட் நகரவையின் சமுதாயத் தோட்டம் லேக்கர் ரிசர்வ், எல்வா ஸ்ட்ரீட், ஸ்ட்ராத்ஃபீல்ட்-ல் அமைந்திருக்கிறது.

குறிப்பாக தோட்டத்திற்கான இடம் இல்லாத சமூக அங்கத்தவர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் மூலிகைகள் வளர்ப்பதில் தீவிரமாக ஈடுபட சமுதாயத் தோட்டங்கள், உதவுகின்றன. சமுதாயத் தோட்டம் என்பது மற்ற மக்களைச் சந்திக்கவும் அவர்களிடமிருந்து புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளவும் ஒரு சிறந்த இடமாகவும் உள்ளது.

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் சமுதாயத் தோட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

## உங்களுடைய கருத்துக்களைத் தெரிவியுங்கள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை எப்பொழுதும் இப்பகுதியை மேம்படுத்துவதற்கும் இங்கே குடியிருப்பவர்களுக்கு சேவை செய்வதற்கும் உரிய வழிகளைத் தேடி வருகிறது. அனைத்து திட்டங்களும் நகரவையின் இணையதலத்தில் ‘உங்களுடைய கருத்துக்களைத் தெரிவியுங்கள்’ பக்கத்தில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

முக்கியமான கொள்கைகள், திட்டமிடல்கள் மற்றும் திட்டங்கள் குறித்த உங்களுடைய கருத்தை நகரவைக்குத் தெரியப்படுத்துங்கள். தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

## எங்களுடன் இணைந்து தன்னார்வலராக வேலை செய்தல்

எங்களுடைய பல திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகள் தன்னார்வத் தொண்டர்களையே சார்ந்திருக்கிறது. தங்களுடைய நேரம், ஆற்றல் மற்றும் அறிவைச் செலவிடும் இந்த சிறப்பு நபர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல் பல பணிகளைச் செய்ய முடியாது.

எங்களுடைய தன்னார்வத் திட்டம் தன்னார்வலர்களுக்கு சமூக, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் விளைவுகளை மேம்படுத்துகிற வகையில் சமூக ஈடுபாட்டினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்ட்ராத்ஃபீல்டில் தன்னார்வலராக வேலை செய்வது:

- சமூகத்திற்குப் பலனளிக்கும்
- மற்றவர்களுக்கு உதவ உங்களுடைய திறன்களை மேம்படுத்தும்
- வேலை அனுபவத்தைப் பெற உதவும்
- புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும்
- புதிய நபர்களைச் சந்திப்பதற்கு உதவும்

மேலும் தகவலுக்கு மற்றும் புஷ்கேர் எப்போது, எங்கே நடத்தப்படுகிறது என்பதற்கு, தயவுசெய்து இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

## சமூக மானியங்கள்

குடியிருப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை வழங்கவும், எமது உள்ளூர் சமூகத்திற்கு ஆதரவியவியாக இருப்பதற்கும் அவர்களுக்கு அதிகார வலு அளிப்பதற்கும் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை உறுதிபூண்டுள்ளது. ஸ்ட்ராத்ஃபீல்ட் சமூகத்தை ஆதரிக்கும் சமூக அல்லது கலாச்சாரத் திட்டங்களை உருவாக்க நிறுவனங்கள் அல்லது குழுக்களுக்கு நகரவையின் சமூக மானியத் திட்டம் ஆண்டுதோறும் நிதியுதவி வழங்குகிறது.

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் சமூக மானியங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யவும்.

# விளையாட்டு



## உடற்பயிற்சி சாதனங்கள்

ஸ்ட்ராத்ஃபீல்டின் பல பூங்காக்களில், பொதுமக்கள் இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் உடற்பயிற்சி சாதனங்கள் உள்ளன.

அவற்றை எங்கே காணலாம் என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## விளையாட்டு அரங்கங்கள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையிடம் பூங்காக்களிலும், பாதுகாக்கப்பட்ட இடங்களிலும் அமைந்துள்ள 26 விளையாட்டு மைதானங்கள் உள்ளன. இந்த விளையாட்டு மைதானங்கள் பல்வேறு வயதினருக்கும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விளையாட்டு மைதானத்திலும் பயனர்கள் பல்வேறு விதமான செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட வயதுக் குழுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட பல்வேறு வகையான தற்போதைய மற்றும் எதிர்கால சமூகத் தேவைகளை விளையாட்டு மைதானங்கள் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதுதான் மேம்பாடுகள் மற்றும் பராமரிப்பின் நோக்கமாகும்.

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் விளையாட்டு அரங்கங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கும், அவை எங்கு அமைந்துள்ளன என்ற தகவல்களுக்கும், தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## 'பே-டு-பே (BAY TO BAY) சைக்கிள் மற்றும் நடைபாதை'

சிட்னியின் சிறந்த சைக்கிள் மற்றும் நடை பாதைகளில் ஒன்று ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவைப் பகுதி வழியாக செல்கிறது.

'பே-டு-பே' (BAY TO BAY) ஷேர்டு பாத்வே' என்பது ரைட்-இல் உள்ள செட்லர்ஸ் பூங்காவிலிருந்து பாட்டனி பே வரை 23 கிலோமீட்டர் நீளமுள்ள பாதையாகும். இந்த பாதையின் பெரும்பகுதி வரலாற்று சிறப்புமிக்க குக்ஸ் நதியை ஒட்டிச் செல்கிறது.

ஸ்ட்ராத்ஃபீல்ட் வழியாகச் செல்லும் பகுதியை நடை மூலம் கடக்கத் தேவைப்படும் நேரம் 90 நிமிடங்கள் மட்டுமே. இது நாய்களுக்கான (கழுத்துக் கயிறு கட்டப்பட்டவை) சிறந்த நடைபாதையாகவும் உள்ளது.

கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

## பூங்காக்கள் மற்றும் விளையாட்டு அரங்குகள் வாடகைக்கு

பள்ளிகள், 'கிளப்பு'கள், சமூகக் குழுக்கள் மற்றும் பொது மக்களுக்கு பருவகால மற்றும் சாதாரண அடிப்படையில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக வாடகைக்கு அளிக்கப்படுகின்றன.

வாடகைக்குக் கிடைக்கும் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் சில:

- Strathfield Park
- Airey Park
- Mason Park
- Cooke Park
- Begnell Field
- Hudson Oval
- Bark Huts Reserve
- Bressington Park

வாடகைக்குக் கிடைக்கும் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த 'QR' குறியீட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.



# நிகழ்ச்சிகள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையின் நிகழ்ச்சி நாட்காட்டியில் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையுமே மகிழ்விக்கும் விஷயங்கள் எல்லாவற்றிலும் சிறிது உள்ளன! 'ஆஸ்திரேலிய தினம்' மற்றும் 'நிலவுப் புத்தாண்டு'டன் ஆண்டின் தொடக்கத்தை நாங்கள் தொடங்கும் வேளையில் எங்களுடன் கலந்து கொள்ளுங்கள்; ஹோம்புஷ் கிராம கண்காட்சியில் உள்ளூர் சமையலைச் சுவைத்து மகிழுங்கள்; 'குக்ஸ் ரிவர் ஃபன் ரன்'னில் ஓடுவதற்குப் பதிவு செய்யுங்கள்; நமது தனித்துவம் மிக்க நிகழ்ச்சியான 'வசந்த விழா'வைத் தவறவிடாதீர்கள், மேலும் நமது 'கிறிஸ்துமஸ் கேரல்'களின் பண்டிகை உணர்வோடு ஆண்டை நிறைவு செய்யுங்கள்!



**'ஆஸ்திரேலியா தினம்'**
**26 ஜனவரி - ஸ்ட்ராத்ஃபீல்ட் பார்க்**

ஆஸ்திரேலியாவைப் பற்றி நாம் பெருமை கொள்ளும் விஷயங்களைக் கொண்டாடவும், உள்ளூர் குடிமக்களுக்கு அங்கீகாரம் வழங்கவும், ஸ்ட்ராத்ஃபீல்ட்-ஐ தங்களுடைய இல்லமாக நினைக்கும் புதிய ஆஸ்திரேலியப் பிரசைகளை வரவேற்கவும் உள்ளூர் சமூகத்திற்கு 'ஆஸ்திரேலியா தினம்' ஒரு வாய்ப்பளிக்கிறது.



**'நிலவுப் புத்தாண்டு'**
**ஜன/பிப் - ஹென்லி ஸ்டிரீட், ஹோம்புஷ் மேற்கு**

சிங்க நடனம், நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் சுவையும் கலாச்சாரமும் நிறைந்த உணவுகளுடன் செழிப்பினையும் நல்ல ஆரோக்கியத்தையும் ஹோம்புஷ் வெஸ்டின் மையத்தில் உள்ள ஹென்லி தெருவில் கொண்டாடுங்கள்.



**'ஹோம்புஷ் வில்லேஜ் ஃபேர்'**
**மே இறுதி - ரோசெஸ்டர் ஸ்டிரீட், ஹோம்புஷ்**

ஹோம்புஷ்-ஐ உள்ளூர் உணவக மையமாகத் தேர்ந்தெடுக்கும் அளவுக்குப் பல்வேறு உணவுகள், நேரடி சமையல் விளக்கக்காட்சிகள் மற்றும் உங்களுடைய குழந்தைகள் நிச்சயமாக ரசிக்கும் நடவடிக்கைகளைக் கண்டுகளியுங்கள்!




## ‘குக்ஸ் ரிவர் ஃபன் ரன்’
## ஜூன் மாதத்தின் இறுதி ஞாயிறுக்கு முந்திய ஞாயிறு - ஃபிரெஷ்வாட்டர் பார்க், ஸ்ட்ராத்ஃபீல்ட்

குக்ஸ் ரிவர் ‘பே-டு-பே ஷேர்டு பாத்’-இன் அழகைக் கண்டு ரசித்துக்கொண்டே உங்களுடைய பழைய சாதனையை முறியடியுங்கள், உங்களுடைய ஒட்டுமொத்த குடும்பத்தையும் பதிவு செய்து கொள்ளுங்கள், அல்லது உங்களுடைய நண்பர்களுடன் உலாவுங்கள். அனைத்து விதமான உடற்பயிற்சிகளுக்கும் ஏற்ற இடமாகவும், குளிர்ச்சிமிக்க குளிர் காலக் காலை வேளையில் நீங்கள் உங்களைக் கதகதப்பாக வைத்துக்கொள்ளலாம்.



## வசந்த விழா
## செப்டம்பர் முதல் சனிக்கிழமை - ஸ்ட்ராத்ஃபீல்ட் பார்க்

குடும்பத்தோடு கூடி வசந்த காலம் தொடங்குவதைக் கொண்டாடி மகிழுங்கள்! சிறந்த குழந்தைகளுக்கான கலைஞர்கள், ஒரு இரகசியத் தோட்டம், நேரடி பொழுதுபோக்கு, சந்தை கடைகள், களியாட்ட சவாரிகள், விளையாட்டுகள், வேடிக்கைகள் மற்றும் குதிரை ஏற்றங்கள் போன்றவை ஏற்பாடு செய்யப்படுவதால் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை ஏற்பாடு செய்யும் மாபெரும் நிகழ்வுகள் எப்போதுமே மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுபவையாக இருக்கும்.



## பூங்காவில் திரைப்படங்கள்
## அக்டோபர் முதல் மார்ச் வரை - ஸ்ட்ராத்ஃபீல்ட் பார்க்

அனைத்தையும் உதறிவிட்டு பிக்னிக் சென்று, நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தின் கீழ் அமர்ந்து திரைப்படங்களைக் கண்டு ரசியுங்கள். நீங்கள் 8 வெவ்வேறு திரைப்படங்களிலிருந்துத் தேர்ந்தெடுத்து, அவை அனைத்தையும் கண்டு ரசிக்கலாம்!



## ‘கிறிஸ்மஸ் கேரல்ஸ்’
## டிசம்பர் மாதம் இரண்டாவது சனிக்கிழமை - ஸ்ட்ராத்ஃபீல்ட் பார்க்

ஸ்ட்ராத்ஃபீல்ட் ‘கிறிஸ்மஸ் கேரல்’ஸின் மாயாஜாலங்களையும் விழாக்கோலத்தையும் கண்டு ரசித்து ஆண்டினை நிறைவு செய்யுங்கள்! புத்தாண்டை நாம் எதிர் நோக்கியிருக்கும் இச் சமயத்தில், பனியில் ‘சான்டா’வுடன் சேர்ந்து நடனமாடி, கிறிஸ்மஸ் சினிமா படத்தையும், வானவேடிக்கையையும் கண்டு ரசியுங்கள்.

ஸ்ட்ராத்ஃபீல்ட் நிகழ்வுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

*தேதி மற்றும் இடம் உட்பட நிகழ்ச்சிகளின் விவரங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை. அனைத்து முக்கியமான மற்றும் சமூக நிகழ்ச்சிகளைப் பற்றிய சமீபத்திய விவரங்களைக் காண www.strathfieldevents.nsw.gov.au-ஐ பார்க்கவும்.*

# ‘ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவை நூலகம் மற்றும் இன்னோவேஷன் ஹப்’

இந்த புதிதாக புதுப்பிக்கப்பட்டுள்ள இடம் 1 ஜூலை 2020 புதன் கிழமையன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய மற்றும் நவீன பகுதியில் ஒரு கண்காட்சிக்கான இடம், பல்நோக்கு இடம், படிப்புக்கான உள்ளரங்கம் மற்றும் கற்றல் ஆய்வகம் ஆகியவை அமைந்துள்ளன.

ஸ்ட்ராத்ஃபீல்ட் நூலகம் எங்கள் சமூகத்திற்கு கீழ்க் காண்பன உட்பட்ட பல்வேறு வகையான சேவைகள் மற்றும் செயல்பாடுகளை வழங்குகிறது:

- புத்தகங்கள், CD-கள் மற்றும் DVD-கள் உட்பட்ட தொகுப்பு
- சமூக மொழி சார்ந்த புத்தகங்கள்
- உள்ளூர் ஆய்வுகளின் தொகுப்பு
- நூலகங்களுக்கிடையில் கடன் சேவை
- குழந்தைகளின் நடவடிக்கைகள்
- இளைஞர்கள் மற்றும் HSC நடவடிக்கைகள்
- ‘புக் கிளப்’ஸ்
- அமைதிகாப்பு நீதவான் சேவைகள்

இணையவழி சேவைகள் மற்றும் தொழில்நுட்பம்:

- ‘இ-புத்தகங்கள்’, ‘இ-ஆடியோ புத்தகங்கள்’ மற்றும் ‘இ-இதழ்’களின் தொகுப்புகள்
- இணையத்திற்கான வயர்லெஸ் அணுகல்
- நகலெடுத்தல், அச்சிடல் மற்றும் ஸ்கேனிங் செய்தல்
- 3D பிரிண்டர்
- பொது இடங்களில் கணினிகள் மற்றும் ‘டாக்கிங் ஸ்டேஷன்’(docking station)ஸ்



பிற நூலக சேவைகளில் அடங்குவன:

### இல்ல நூலக சேவை

இயலாமை அல்லது நடமாட இயலாமை காரணமாக நூலகத்திற்கு வர முடியாத வாசிகளுக்கு இலவச இல்ல நூலக சேவையை ஸ்ட்ராத்ஃபீல்ட் நூலகம் வழங்குகிறது.

ஒவ்வொரு உறுப்பினரின் தேவைகள் அல்லது கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய நூலக ஊழியர்களால் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாதாந்திர அடிப்படையில் உறுப்பினரது வீடு அல்லது முதியோர் இல்லத்தில் சென்று நேரடியாக வழங்கப்படுகின்றன.

### நூலகங்களுக்கிடையிலான கடன்கள்

ஸ்ட்ராத்ஃபீல்ட் நூலகத்தில் உங்களுக்குத் தேவையான புத்தகம் இல்லாவிட்டால், நூலகங்களுக்கு இடையேயான கடன் சேவையின் மூலம் மற்ற பொது நூலகங்களிலிருந்து அந்த புத்தகத்தைக் கடனாகப் பெற நூலகம் முயற்சி செய்யலாம். பெரும்பாலான அச்சிடப்பட்ட புத்தகங்களை நூலகங்களுக்கு இடையேயான கடன் மூலம் பெறலாம், இருப்பினும் ஒவ்வொரு கடனளிக்கும் நூலகமும் குறிப்பிட்ட பொருளைக் கடனளிப்பது தொடர்பாக தங்களுடைய சொந்தக் கொள்கையைக் கொண்டிருக்கும்.

### ‘அயர்ன்பார்க் கேலரி’

‘அயர்ன்பார்க் கேலரி’ என்பது வளர்ந்து வரும் மற்றும் நன்கு அறிமுகமான உள்ளூர் கலைஞர்களின் படைப்புகளை தொங்கவிடுவதற்கும் காட்சிப்படுத்துவதற்குமான ஒரு பிரத்யேகக் கூடமாகும். ஒவ்வொரு காலாண்டிலும் வெவ்வேறு கண்காட்சியை நடத்துவதால் ஒவ்வொரு முறை வரும்போதும் உங்களுக்கு ஒரு புதிய அனுபவம் கிடைக்கும். நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால், exhibition@strathfield.nsw.gov.au என்ற முகவரியில் உங்களுடைய ஆர்வத்தைச் சமர்ப்பிக்கலாம்.

நூலக சேவைகள் பற்றிய கூடுதல் தகவலு-க்கு, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.




### ‘புக் லாக்கர் சேவை’

சமூகத்திற்கான அணுகல்-வசதிகளையும் மற்ற வசதிகளையும் அதிகரிக்க உதவ, நூலக உறுப்பினர்கள் இணையவழி நூலக பட்டியல் மூலம் புத்தகங்களை இணையவழியில் கோரலாம்.

‘லாக்கர்’களை நீங்கள் 24/7 அணுகலாம். முன்பதிவுகள் கிடைக்கும் போது SMS ஒன்றைப் பெறுவீர்கள். உங்களுடைய புத்தகத்தைச் சேகரிக்க ‘QR’ குறியீடு’ அல்லது ‘PIN’-ஐப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் படித்து முடித்ததும், நூலகத்தின் பொருட்களைத் திருப்பியளிக்க அவற்றை ‘லாக்கர்’களில் வைக்கவேண்டும்.

அமைவிடம்:

- ஸ்டிராத்ஃபீல்ட் நகரவை லைப்ரரி அன்டு இன்னோவேஷன் ஹப்’ 65 ரோசெஸ்டர் ஸ்டிரீட், ஹோம்புஷ்
- ஹை ஸ்டிரீட் கம்யூனிட்டி சென்டர் 64 ஹை ஸ்டிரீட், ஸ்ட்ராத்ஃபீல்ட்

### தெரு நூலகங்கள்

சமூக உறுப்பினர்கள் தாங்கள் வாசித்த புத்தகங்களைப் பகிர்ந்துகொள்ளவும், மற்றவர்கள் படித்து இன்புறவும் சமூக உறுப்பினர்களால் தெரு நூலக இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தெரு நூலக வலைத்தலத்தில் உங்களுக்கு அருகிலுள்ள இடத்தைக் கண்டறிய, தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.



# எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**வாடிக்கையாளர் சேவை திறப்பு நேரங்கள்:**

திங்கள் - வெள்ளி: 10 மு.ப - 4 பி.ப

(நடப்பு நாள் வரை சரியான அலுவலக நேரங்களுக்கு தயவுசெய்து இந்த ‘QR’ குறியீட்டை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்)

**தொ.பேசி:**

(02) 9748 9999

**வலைத்தலம்:**

www.strathfield.nsw.gov.au
www.strathfieldevents.nsw.gov.au

**மின்னஞ்சல்:**

council@strathfield.nsw.gov.au

**தொ.நகல்:**

(02) 9764 1034

**உதவி:**

‘மொழிபெயர்ப்பாளர் மற்றும் மொழிபெயர்துரைப்பாளர் சேவை (TIS)’ மூலம் உங்களுடைய சொந்த மொழியில் ஸ்ட்ராத்ஃபீல்ட் நகரவையுடன் பேசுவதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் சேவை உள்ளது. தயவுசெய்து 13 14 50 என்ற எண்ணை அழைத்து உங்களுடைய மொழி வேண்டுமெனக் கேளுங்கள். பின்னர், (02) 9748 9999 என்ற தொலைபேசி எண்ணில் “ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில்”-உடன் பேச வேண்டும் என்று சொல்லுங்கள். உள்ளூர் அழைப்புக் கட்டணத்தில் இந்தச் சேவையைப் பயன்படுத்தலாம்

**நேரடியாக வரவும்:**

வடிக்கையாளர் சேவை மையம்
65 Homebush Road, Strathfield NSW 2135

**எழுதவும்/அஞ்சல்:**

ஸ்ட்ராத்ஃபீல்ட் கவுன்சில்
அ.பெட்டி 120, Strathfield NSW 2135

**சந்தாதாரராகுங்கள்:**

வாராந்திர ‘இ-நியூ’ஸைப் பெற புகுபதிவாக்கம் செய்யுங்கள்
www.strathfield.nsw.gov.au

**எங்களைப் பின்தொடர:**

FACEBOOK: @StrathfieldEvents
@StrathfieldCouncil

TWITTER: @StrathfieldMC

INSTAGRAM: @StrathfieldCouncil

இந்த சிற்றேட்டில் உள்ள தகவல்கள் மே 2021 நிலவரப்படியானவை.





STRATHFIELD COUNCIL
65 Homebush Road, Strathfield NSW 2135
P 02 9748 9999 | www.strathfield.nsw.gov.au | www.strathfieldevents.com.au
@StrathfieldEvents
@StrathfieldCouncil
@StrathfieldMC
@StrathfieldCouncil